**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No:1/2021** **நாள் 04.06.2026**

**வாசா.1, திருமதி.வெள்ளைத்தாய்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார் –**

என் அம்மா மதுரையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து 30.07.2020ம் தேதியில் அவரை 2ம் எதிர்வாதி தான் சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்த்தார் என்று சொன்னால் அது சரிதான். நான் பி.எஸ்.சி (தாவரவியல் ) படிப்பை படித்துள்ளேன். பிராது 3வது தபசில் சொத்தானதில் என் பெற்றோர்களுக்கு சொந்தமான பள்ளிக்கூடடம் இருந்தது. அந்த பள்ளிக்கூடத்தில் என் அம்மாவும் சேர்ந்து மேலான்மை பார்த்து வந்தார். என் தாயாரின் இருதய சிகிச்சைக்காக வேண்டி ரூ.8,50,000/-யை வழக்கில் உள்ள 2ம் எதிர்வாதி மற்றும் அவரது கணவர் தான் செலவு செய்தார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. 2ம் எதிர்வாதி தவிர என் தாயாரை மற்ற யாரும் கவனிக்கவில்லை என்று சொன்னால் அப்பொழுது கொரோனா காலகட்டம் என்பதால் எங்கள் யாரையும் அனுமதிக்கவில்லை. சாட்சி மீண்டும் தானாக சாட்சியின் வீடானது அப்பல்லோ மருத்துவமனையின் அருகில் உள்ளது என்றும் தனது தங்கையான வழக்கில் உள்ள 2ம் எதிர்வாதியானவர் அடையாள அட்டையை வைத்துக்கொண்டு தன் தாயாரை பார்த்து வந்து வெளியில் இருக்கும் எங்களிடம் வந்து சொல்வார் என்றும் அதன் பின்பு சாட்சியின் கணவர் மூலமாக மருத்துவமனையில் சென்று பார்த்த சமயத்தில் சாட்சியின் மாமா அன்றைய தேதியில் இறந்துபோய்விட்டதாகவும் , உடலை வாங்குவதற்கு இராஜபாளையத்தில் இருந்து மறுநாள் சென்றதாகவும் அந்த சமயத்தில் சாட்சியின் தாயார் கண் விழிக்கவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். நான் தற்பொழுது அளிக்கும் சாட்சியமானது பொய்யானது என்றும் அது போன்று யாரும் போய் பார்க்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 2ம் எதிர்வாதியும், அவரது கணவரும் சேர்ந்து தான் என் தாயாரை மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து சிகிச்சை பார்த்து வந்தார்கள் என்று சொன்னால் அப்படியில்லை. என் தாயார் 22.09.2020ம் தேதியில் இறந்துபோனார். சாட்சி மீண்டும் தானாக மருத்துவர் அனைவரையும் அழைத்து தன் தாயாரை வீட்டிற்கு அழைத்து செல்லும் படி சொன்னதாக சாட்சியம் அளிக்கிறார். அவ்வாறு மருத்துவர் எங்கள் அனைவரையும் அழைத்து என் தாயாரை வீட்டிற்கு அழைத்து செல்லும்படி நான் தற்போது அளிக்கும் சாட்சியத்தை பொறுத்து வழக்குரையிலும் மற்றும் நிரூபண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொல்லியுள்ளேன். சாட்சியிடம் பிராதை காண்பித்து வழக்கறிஞர் அவர்களால் கேள்வி பகேட்ட போது சாட்சியானவரால் பிராதை பார்த்து அதில் சொல்லியுள்ளதா என்று எனக்கு தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார் . நான் சொல்வது போல் என் தாயார் 22.09.2020ம் தேதியில் இறந்துபோகவில்லை என்றும் அவர் 24.08.2020ம் தேதியில் தான் இறந்துபோனார் என்று சொன்னால் அது சரியல்ல.

24.08.2020ம் தேதியில் என் தாயார் இறந்த பின்பு அவரை மதுரையில் உள்ள மின் மயானத்தில் அடக்கம் செய்வதற்கு 2ம் எதிர்வாதியின் கணவர் தான் மதுரை மாநகராட்சி மூலமாக நடவடிக்கை எடுத்து அதனால் அவர் பெயருக்கு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அப்படியில்லை நான் என் மகன் மூலமாக நடவடிக்கை எடுத்தேன். அதற்குள் 2ம் எதிர்வாதியின் கணவர் நடவடிக்கையை மேற்கொண்டார். அவ்வாறு என் தாயாரின் இறப்புக்கு நாங்கள் யாரும் செல்லவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. என்னிடம் காட்டப்படும் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட Death Summaryல் என் தாயார் இறக்கும் வரையிலும் நல்ல நிலையில் தான் இருந்தார் என்று மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் இருந்து சான்றானதை 2ம் எதிர்வாதியின் கணவரிடம் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் மேற்படி ஆவணம் பற்றி நான் பார்க்கவில்லை என்றும் அதனால் அதை பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார். 2007ம் ஆண்டு என் தாயார் புற்றுநோய் சிகிச்சையானதை சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து'தான் எடுத்தார் என்றால் சரிதான். சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து புற்றுநோய்க்காக அறுவைசிகிச்சை செய்த பின்பு சில காலம் தான் என் தாயார் மருந்து மாத்திரைகளை எடுத்துக்கொண்டார் என்றும் அதன் பின்பு என் தாயார் மருந்து மாத்திரைகளை எடுத்துக்கொள்ளவில்லை என்று சொன்னால் மருந்து மாத்திரைக்காக வேண்டி 4வது தங்கையிடமிருந்து ரூ.60,000/- யை 2ம் எதிர்வாதியானவர் வாங்கியுள்ளார். நான் சொல்வது பொய் என்றும் அது போன்று என்னுடைய வழக்குரையிலும் சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் அப்படியில்லை. அது போல் என்னிடம் காட்டப்படும் டிஸ்சார்ச் சம்மரியும் மதுரை அப்பல்லோ மருத்துவமனையில் இருந்து 2ம் எதிர்வாதியிடம் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் புற்றுநோயில் இருந்து முழுவதுமாக குணமாகிவிட்டார் என்று சொன்னால் 2ம் எதிர்வாதி சொல்லி தான் எனக்கு தெரியும். மேற்படி என் தாயாருக்கு புற்றுநோய் முழுவதுமாக குணமாகிவிட்டது என்று நான் இதற்கு முன்பு அளித்த சாட்சியத்தில் என் தாயாருக்கு மனதளவில் முழுவதும் திருப்தி இல்லை என்று நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் அப்படியில்லை. வாசாஆ.3 மற்றும் வாசாஆ.4ல் உள்ள 3ம் தபசில் உள்ள சொத்தானது அ.வ.எண்.129/2000 வழக்கில் உள்ள 2 முதல் 5 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்று சொன்னால் அது சரிதான். அ.வ.எண்.129/2000ம் வழக்கில் உள்ள 3ம் தபசில் 16வது அயிட்டம் தவிர இதர சொத்துக்கள் அனைத்தையும் நாங்கள் 4 பேரும் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்துவிட்டோம் என்று சொன்னால் அது சரிதான். அந்த கிரைய ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று நாங்கள் 4 பேரும் சார்பதிவாளர் முன்னிலையில் கையொப்பம் செய்து கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தை கிரையம் செய்து கொடுக்கும் போது அந்த சொத்துக்கு

உரிமையாளர் சார்பதிவாளர் முன்பு வைத்து கையொப்பம் செய்தால் தான் அந்த சொத்தை விற்க முடியும் என்றால் சரிதான். சொத்தின் உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலத்திற்கு செல்லாமல் சொத்தை விற்பனை செய்ய முடியாது என்று சொன்னால் அது சரிதான். அதனால் தான் என் தாயார் பிராது 1, 2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து வழக்கில் உள்ள 1, 2 எதிர்வாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணத்தைத் எழுதிக்கொடுத்துள்ளார் என்று சொன்னால் அது சரியல்ல. அதனால் தான் அந்த தான செட்டில்மெண்ட் ஆவணங்களில் என் தாயாரின் போட்டோக்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து போட்டோ எடுக்கப்பட்டதாக உள்ளது என்றால் செட்டில்மெண்ட் ஆவணங்களில் என் தாயாரின் போட்டோக்கள் எடுக்கப்பட்டதாக பார்க்க முடிகின்றது. எனவே அந்த இரண்டு தான செட்டிமெண்ட் ஆவணங்களை என் தாயார் நல்ல மனநிலையில் இருந்து எழுதிக்கொடுத்து அந்த சொத்துக்களை 1, 2 எதிர்வாதிகள் அடைந்துள்ளார்கள் என்று சொன்னால் அது சரியல்ல. அவ்வாறு 1, 2 எதிர்வாதிகளுக்கு 2 செட்டில்மெண்ட் ஆவணங்களை என் தாயார் எழுதிக்கொடுத்தது பற்றி என்னிடமும் மற்ற சகோதரிகளிடமும் சொல்லியுள்ளார் என்றும் அது பற்றிய விபரம் எங்களுக்கு தெரியும் என்று சொன்னால் அது சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய பிரமாண பத்திரிக்கையில் பக்கம் 4 ல் பாரா 11 ல் " நாங்கள் பிற்பாடு விசாரித்ததில் 1, 2 எதிர்வாதிகள் கடன் வாங்குவதற்காக கையெழுத்துக்கள் வேண்டும் என்று கூறி 25.11.2016 மற்றும் 30.08.2017 செட்டில்மெண்ட் பத்திரங்களை உற்பத்தி செய்திருப்பது தெரியவந்தது. 25.11.2016 ம் தேதிய செட்டில்மெண்ட் பத்திரத்திலோ அல்லது 30.08.2017 ம் தேதிய தான பத்திரத்திலோ என்னை பற்றியோ, 3 ம் பிரதிவாதி பற்றியோ மகள்கள் என்ற முறையில் யாதொரு குறிப்பும் இல்லை , மேற்படி பத்திரங்களில் ஏன் எனது தாயார் 1, 2 எதிர்வாதிகளுக்கு மட்டும் சொத்தை கொடுக்கிறேன் என்ற காரணமும் இல்லை " என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்லும் மேற்படி சாட்சியத்தை பொறுத்து அந்த இரண்டு செட்டில்மெண்ட் ஆவணங்களை படித்து பார்த்திருந்தால் தான் என்னால் சாட்சியமாக அளிக்க முடியும் என்றால் சரிதான். இந்த ஆவணங்களின் நகல்களை நான் எப்பொழுது வாங்கி பார்த்தேன் என்று கேட்டால் என் தாயார் செப்டம்பர் மாதம் இறந்த பின்பு அக்டோபர் , நவம்பர் மாதத்தில் நான் நகல்களை வாங்கி பார்த்தேன். இந்த பத்திரங்களை படித்து பார்த்த பின்பு தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்தோம். என் தாயார் இந்த இரண்டு தான செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதிக்கொடுத்த சமயத்தில் என் தாயார் நல்ல மன நிலையில் இல்லை என்று நான் சொல்லும்போது அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்று கேட்டால் என் தாயாரானவர் எனது 2 வது தங்கையின் வீட்டில் போய் இருந்த போது என் தாயார் 2 மாதம் காலமாக சாப்பிடாமல் இருந்ததற்காக சிகிச்சை மேற்கொண்டு வந்தார், அவருக்கு இயற்கை உபாதையும் கழிக்க முடியாமல் அவதிப்பட்டு வந்துள்ளார் அவரால் பேசவும் முடியாமல் இருந்துள்ளார் அதன் பின்பு ஊருக்கு அனுப்பி வைத்து அங்கிருந்த நபர்களிடம் அவர் பேசி வந்தார்.

நல்ல மனநிலையில் இல்லை என்பதற்கான ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் தற்போது அளிக்கும் சாட்சியத்தை பொறுத்து வழக்குரையிலும் , சாட்சிய பிரமாண பத்திரிக்கையிலும் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் சொல்லவில்லை தற்போது தான் சாட்சியம் அளிக்கிறேன். என் தாயார் 1, 2 எதிர்வாதிகளுக்கு மேற்படி 2 தான செட்டில்மெண்ட் ஆவணங்களை எழுதிக்கொடுத்த பின்பு பிராது 1ம் அயிட்ட சொத்தில் இருந்த சீமை கருவேல மரங்களை வழக்கில் உள்ள 2ம் எதிர்வாதி தான் என் தாயார் உயிரோடு இருந்த போது வெட்டி அப்புறப்படுத்தியுள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் ஓய்வூதியம் பெற்ற நபர் ஆவார். மேற்படி 2 செட்டில்மெண்ட் ஆவணங்கள் படி பிராது சொத்துக்கள் 1, 2 எதிர்வாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்களது அனுபத்தில் இருந்ததை நான் ஆட்சேபிக்கவில்லை என்றால் அது சரியல்ல.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டி இருதரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 04th day of June 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.